உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 22.06.2026 • மலர் 04 • இதழ்: 173 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 22.06.2026 • Vol : 04 • Issue : 173 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# வருங்கால கட்டமைப்புக்கு சுயசார்பு மிக அவசியம்

## பிரதமர் பேச்சு



கொல்கத்தா ஜூன் 22

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாநகரில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

சர்வதேச யோகா தினம் உலகம் முழுவதும் 12 வது ஆண்டாக இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி பிரதமர் மோடி தலைமையில் கொல்கத்தாவில் யோகா பயிற்சி நடைபெற்றது. இதில் யோகா பயிற்சி நிறுவனங்கள், பள்ளி, கல்லூரி மாணவமாணவிகள் உள்பட 35 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

இதனை முன்னிட்டு மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாநகரில் நடந்த சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவர் பேசும்போது, புதிய கடல் சார் சகாப்தத்தில் மேற்கு வங்காளம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும். துறைமுகங்கள்,

தொழிற்சாலைகள், திறன்கள், கடல்சார் பொருளாதாரம் புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லப்படுவது என அவற்றிற்கான ஆற்றலை அது கொண்டுள்ளது.

வருங்காலத்தில் இந்தியாவின் நீல பொருளாதாரம், கடல்சார் உற்பத்தி, தளவாடங்கள் மற்றும் கடலோர வளர்ச்சிக்கான முக்கிய மையங்களில் ஒன்றாக மேற்கு வங்காளம் திகழும்.

ஆனால், அமைதியை பாதுகாக்க வலிமையும் சம அளவில் அவசியம் என இந்தியா அறிந்திருக்கிறது. வளங்களை பாதுகாப்பதற்கு வீரர்களும், வருங்கால கட்டமைப்புக்கு சுயசார்பும் மிக அவசியம். இந்திய கடற்படையில் ஐ.என்.எஸ். ஆகிரே, ஐ.என்.எஸ். துனாகிரி மற்றும் ஐ.என்.எஸ். சான்ஷோதக் ஆகியவை இன்று இணைக்கப்பட்டு உள்ள நிகழ்வு, அந்த ஆற்றலுக்கான அடையாளங்களாக காணப்படுகின்றன என்று கூறினார். அவை, 21ம் நூற்றாண்டில் தன்னுடைய ஆற்றலை அங்கீகரிக்கும் வகையிலான, தன்னுடைய திறனில் நம்பிக்கை கொண்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனுடம், மனவுறுதியுடனும், வேகம்,

ஆற்றல் மற்றும் தீர்க்கத்துடன் நிலையாக முன்னேறி கொண்டிருக்கும் இந்தியாவை அடையாளப்படுத்துகின்றன என்று அவர் கூறியுள்ளார்.









### பல் சமய நட்புறவு கழகம் சார்பில்

## முதலமைச்சர் 52 வது பிறந்தநாள் விழா



திருப்பூர்: ஜூன் 22

காங்கேயம் சாலை நல்லி கவுண்டன் புதூரில் தமிழக வெற்றிக்கழக தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர்சி. ஜோசப் விஜய்52வது பிறந்தநாள் விழா பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.

பல் சமய நட்புறவு கழகத்தின் சார்பில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. நல்லூர் பகுதி செயலாளர் ஷெரீப் முன்னலையில் 48வது வார்டு செயலாளர் கார்த்திக் இனிப்புகளை வழங்கி பொதுமக்களுடன் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார்கள்பல் சமய நட்புறவு கழகத்தின்தலைவர் ஷாஜகான் தலைமையில், பொறுப்பாளர் ஹக்கீம் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்ட துணைத்தலைவர் முஹம்மது மாவட்ட துணைச் செயலாளர் அர்ஷத் அலி ஒன்றிய தலைவர் சந்திரன் ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், மாநகர துணைச் செயலாளர் சர்புதீன்,மற்றும் மாவட்ட மகளிர் அணி தலைவி மேகலா மாவட்ட மகளிர் அணி செயலாளர் சித்ரா மாவட்ட மகளிர் அணி பொருளாளர் அகன்ஷா மற்றும் மாநகர மாணவ அணி செயலாளர் ஹர்ஷத் முகமத்ரியாஸ் ஹஃபில் ஷாருக் அகமதுகைப்,அப்துல் ரஹ்மான் நபீஸ் சுஹைல்அஜ்மல்ரியாஸ்,உமர்இர்பாண், தண்வீர்,சதாம், ஆசில்,கவிண் ஆகியோர் கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவில்சிறப்பித்தார்கள்.

### சிக்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில்

## ரூ.1.65 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டடத் திறப்பு விழா



சிக்கல், ஜூன் 22

ராமநாதபுரம் மாவட்டம் சிக்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டிய கூடுதல் வகுப்பறை பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் எம். சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் புதிய கட்டடத்தை சிறு குறு நடுத்தர தொழில் நிறுவன துறை அமைச்சர் பெ.மதன் ராஜா திறந்து வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் சங்கரநாராயணன், முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி, பொதுப்பணி துறை கட்டுமானம், பராமரிப்பு செயற்பொறியாளர் குருதிவேல் மாறன், கடலாடி தாசில்தார் பரமசிவன், கடலாடி வட்டார வளர்ச்சி ஆணையர் ஜெய ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கரபாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## குமரி மாவட்ட சோதனை சாவடிகளில் கலெக்டர் நள்ளிரவில் ஆய்வு




நாகர்கோவில், அக்.22

கன்னியாகுமரி மாவட்டம் வழியாக அரசு விதிமுறைகளை மீறி கேரளாவுக்கு கனிம வளங்கள் கடத்தபத் படுகிறது. இதையடுத்து தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட சோதனை சாவடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நள்ளிரவில்திடீர்ஆய்வு மேற்கொண்டார். மேலும்இதுகுறித்துஅவர்கூறியதாவது:

மாவட்டத்திற்குட்பட்ட சோதனைச் சாவடிகளில் கனிம வளங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விதிமுறைகளைப் பின்பற்றிச் செல்கின்றனவா என்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்ஒருபகுதியாக தோவாளை வட்டம் ஆரல்வாய்மொழி சோதனை சாவடி, அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட கன்னியாகுமரி நெடுஞ்சலையில் அமைந்துள்ள காணிமடம் சோதனை சாவடி மற்றும் அஞ்சுகிராமம் சோதனை சாவடி உள்ளிட்டவைகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து வாகனங்கள் வருகை குறித்த பதிவேடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கனரக வாகனங்களில் கனிம வளங்கள் சரியான அளவில், நிர்ணயிக்கப்பட்ட எடையில் ஏற்றப்பட்டுள்ளதா எனவும், கனிம வளங்களை ஏற்றி வரும் கனரக வாகனங்களை நிறுத்தி, அவற்றுக்கான முறையான அரசு உரிமங்கள் மற்றும் ரசீதுகள் சரியாக உள்ளதா என்று சரி பார்த்து அனுப்ப காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. சோதனைச் சாவடிகளில் 24 மணி நேரமும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் காவல் துறையினருக்கு அறிவுறுத்தினார்.

மேலும் மாவட்ட நிர்வாகம் அனுமதித்துள்ள விதிமுறைகளைமீறி அதிக பாரம் ஏற்றி வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். என கூறினார். நடைபெற்ற ஆய்வில் வட்டாட்சியர்கள் சிவகலா (தோவாளை), ஆறுமுகம் (அகஸ்தீஸ்வரம்) மற்றும் காவல்துறையினர் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## மனிதநேயம் காத்த தருமபுரி நகராட்சி தூய்மை காவலர்கள்



தருமபுரி ஜூன் 22

தருமபுரி நகராட்சியில் பணி செய்யும் தூய்மை காவலர்கள் வழக்கம் போல் தருமபுரி நகரப் பகுதியை தூய்மை செய்து கொண்டு இருந்தனர். அப்போது குட்டிகளை ஈன்றெடுத்த நாயை யாரோ ஒரு நபர் கத்தியால் அந்த நாயின் வாயில் வெட்டி உள்ளார். நாய்க் குட்டிகளுக்கு ஒரு அம்மாவாக இருந்து பால் கொடுத்து வரும் இந்த வாயில்லா ஜீவனுக்கு ஏற்பட்ட காயத்தை பார்த்து மனம் துவண்டு போன தூய்மை காவலர்கள் உடனடியாக நகராட்சி தூய்மை ஆய்வாளர் சுசீந்திரனை தொடர்பு கொண்டனர். அவரின் அறிவுறுத்தல் படி தருமபுரி ரயில் நிலையம் செல்லும் சாலையில் உள்ள மருத்துவர் மாதப்பனை தொடர்பு கொண்டார். அவர் உடனடியாக நாயை கொண்டுவரச் சொல்லி இலவசமாக மருத்துவம் செய்தார். இதுபோன்று வாயில்லா ஜீவனை கொடுமைப்படுத்தும் மனித மிருகங்கள் வாழும் இந்த உலகத்தில் தான் மனிதநேயமிக்க பல மனிதர்களும், தூய்மை காவலர்களும் வாழ்கின்றனர். தருமபுரி நகராட்சி தூய்மை காவலர்கள் சக்கரவேல், சிந்து குட்டி, செல்வராஜ் ஆகியோருக்கு மை தருமபுரி அமைப்பின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



### நாகர்கோவில்

## புத்தேரி மேம்பால பகுதியில் கொட்டப்பட்டு கிடந்த மருத்துவ கழிவுகள்

நாகர்கோவில், ஜூன்.22

கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் கேரளாவில் இருந்து மருத்துவ கழிவுகளை வாகனங்களில் கொண்டு வந்து சாலையோர பகுதிகளில் கொட்டி விட்டு செல்வது தொடர்ந்து நடைபெற்று வந்தது. இதனால் கேரளாவின் குப்பை கிடங்கு குமரி மாவட்டம் என்ற சூழலுக்கு தள்ளப்பட்டது. இது குறித்து அப்போது புகார் எழுந்த நிலையில் மாவட்ட நிர்வாகம் விரைந்து தலையிட்டு பல்வேறு கழிவு வாகனங்களை பிடித்து அபராதம் விதித்ததுடன் போலீசார் கடும் நடவடிக்கை மேற்கொண்டனர். இதை அடுத்து சமீபகாரங்களாக மருத்துவ கழிவுகள் கொண்டு வந்து கொட்டுவது குமரி மாவட்டத்தில் சிறிதளவு இல்லாமல் இருந்தது. இருப்பினும் அவ்வப்போது சில குறிப்பிட்ட பகுதிகளில் மருத்துவக் கழிவுகளை கொண்டு கொட்டி விட்டு செல்லும் நிலை இருந்து வருகிறது. இந்த நிலையில் தற்போது நாகர்கோவில் அருகே உள்ள புத்தேரி மேம்பாலப் பகுதியில், விதிகளை மீறி நள்ளிரவில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புத்தேரி மேம்பாலத்தின் கீழ் மற்றும் அதன் ஓரங்களில் பயன்படுத்தப்பட்ட ஊசிகள், மருந்துப் பாட்டில்கள், அறுவைச் சிகிச்சைக் கழிவுகள் மற்றும் காலாவதியான மருந்துகள் டன் கணக்கில் கொட்டப்பட்டுள்ளன.

சில தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்கள் தங்களின் கழிவுகளைச் முறையாகச் சுத்திகரிக்காமல், செலவைக் குறைப்பதற்காக நள்ளிரவு நேரங்களில் லாரிகள் மூலம் இங்கு வந்து கொட்டிவிட்டுச் செல்வதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இப்பகுதியில் எப்போதும் பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும், அருகில் விவசாய நிலங்கள் இருப்பதாலும் கடுமையான துர்நாற்றம் வீசுவதோடு, தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. மேலும், மழை பெய்தால் இந்தக் கழிவுகள் அருகில் உள்ள நீர்நிலைகளில் கலந்து ஒட்டுமொத்தப் பகுதியையும் நச்சுமாக்கும் சூழல் உருவாகியுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சி சுகாதாரத் துறையும் உடனடியாகத் தலையிட்டு, கண்காணிப்புக் கேமராக்களை ஆய்வு செய்து, சட்டவிரோதமாக மருத்துவக் கழிவுகளைக் கொட்டும் நபர்கள் மற்றும் மருத்துவமனைகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## பூந்தமல்லியில் வசந்த் அண்ட் கோ புதிய கிளை திறப்பு

சென்னை, ஜூன் 22

வீட்டு உபயோகப் பொருட்கள் விற்பனை நிறுவனமான வசந்த் அண்ட் கோவின் 149வது புதிய கிளை பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது, சென்னை, பூந்தமல்லியில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன புதிய கிளையை, வசந்த் அண்ட் கோ நிறுவனத்தின் பங்குதாரர் தங்கமலர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். திறப்பு விழாவை முன்னிட்டு, ரூபாய் 10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்குதங்க நாணயம், ரூபாய் 50,000க்கு மேல் வாங்குபவர்களுக்கு மிக்ஸி மற்றும் எக்ஸ்சேஞ்ச் ஆஃபர்கள் போன்ற சிறப்புச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தங்களுக்குத் தேவையான எலக்ட்ரானிக்ஸ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்காகப் பொதுமக்கள் தங்களது குடும்பத்தினருடன் புதிய கிளையில் அதிகளவில் திரண்டனர். புதிய கிளை திறப்பு குறித்து நிறுவனத்தின் பங்குதாரர் தங்கமலர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது, வாடிக்கையாளர்களின்நேரடித் திருப்திக்காக எளிய தவணை முறை வசதிகளுடன் இக்கிளை தொடங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். ஆன்லைன் வர்த்தகத்தை விட, வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு தரமான சேவைகளை வழங்குவதே தங்களது நோக்கம் என்றும், அடுத்ததாக ஊத்துக்கோட்டையில் புதியகிளைதிறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### பாலக்கோடு அருகே

## நீட் தேர்வு மாணவி தற்கொலை – சோகத்தில் குடும்பத்தினர்



தருமபுரி ஜூன் 22

தருமபுரியில் உள்ள தேர்வு மையத்தில் நடைபெறும் நீட் தேர்வை எழுத உள்ள நிலையில் மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே உள்ள என்டடப்ட்டி கிராமத்தை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன், இவர் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஊழியராக பணி புரிந்து வருகிறார். இவரது மனைவி கெலமங்கலத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார், இவர்களின் மகள் ரோஷ்ணி (18), கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் +2 முடித்துவிட்டு, மருத்துவப் படிப்பில் சேர வேண்டும் என்ற கனவுடன் நாமக்கல் மாவட்டத்தில் நீட் தேர்வு பயிற்சி மையத்தில் சேர்ந்து படித்து வந்தார். நீட் தேர்விற்க்கு சொந்த ஊருக்கு வந்த மாணவி தருமபுரியில் உள்ளநீட் தேர்வு மையத்தில் நீட் தேர்வை எழுத இருந்த நிலையில் கடந்த சில நாட்களாக மன உளைச்சலுடன் சோர்வாக காணப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மாணவி ரோஷனி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனை அறிந்து அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் பாலக்கோடு காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற காவல்துறையினர் மாணவியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், மாணவி கடிதம் ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா? தேர்வு அச்சம் காரணமா அல்லது வேறு ஏதேனும் காரணங்களா என்பன குறித்து பல்வேறு கோணங்களில் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவராக வேண்டும் என்ற கனவுடன் நீட் தேர்வுக்கு தயாராகி வந்த மாணவி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




### சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு

## ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் 12வது யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோவை ஜூன்:22

கோவை ஜி.கே.என்.எம் மருத்துவமனையின் மாற்று மருத்துவத் துறை சார்பில்,கோவையில் உள்ள ஜி.கே.என்.எம் ஒருங்கிணைந்த புறநோயாளர் மையத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை ஜி.கே.என்.எம் மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி தலைமை விருந்தினராக கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.நிகழ்ச்சியில் மருத்துவ இயக்குநர் டாக்டர் ராகவேந்திரா, மாற்று மருத்துவ ஆலோசகர்கள் டாக்டர் பிரியதர்ஷினி மற்றும் டாக்டர் சுப்ரமணியன் காந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சுமார் 250க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்று,ஒருங்கிணைந்த மேடை யோகா நிகழ்வில் கலந்து கொண்டனர். டாக்டர் பிரியதர்ஷினி மற்றும் டாக்டர் சுப்ரமணியன் காந்தி ஆகியோர் பொதுவான யோகா நெறிமுறைகளின் அடிப்படையில் யோகா பயிற்சிகளை வழி நடத்தினர்.

மேலும் பங்கேற்பாளர்களுக்காக இலவச ரத்த அழுத்தம் மற்றும் ரத்த சர்க்கரைபரிசோதனைமுகாம்நடத்தப்பட்டது.ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் வகையில் சத்தான உணவுப் பொருட்கள் காட்சியும் விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் பேசிய மருத்துவமனை நிர்வாகிகள், "யோகா என்பது உடலையும் மனதையும் ஒரே நோக்கில் ஒருங்கிணைத்து,முழுமையான ஆரோக்கியத்தையும் மன அமைதியையும் வழங்கும் ஒரு சிறந்த வாழ்க்கை முறை"என்று வலியுறுத்தினர். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன. மக்களிடையே யோகாவின் முக்கியத்துவத்தையும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் பரப்பும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், சமூக ஆரோக்கிய மேம்பாட்டிற்கான ஒரு முக்கிய முயற்சியாக அமைந்தது.




தமிழக முதல்வர் பிறந்த நாளினை முன்னிட்டு

# கிருஷ்ணகிரியில் மத்திய மாட்ட தவெக சார்பில் மாரத்தான் போட்டி: மாவட்ட செயலாளர் துவக்கி வைத்தார்

தஞ்சாவூர் ஜூன் 22

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் விவசாயிகளுக்கு 23வது தவ ணை நிதி உதவி வழங்கும் நிகழ்ச் சியில் அமைச்சர்வினோத் ரவி கலந்து கொண்டார்.

கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பிரதமரின் நீதி உதவி திட்டத்தின் கீழ் விவசா யிகளுக்கு 23 வது தவணை தொகையை மற்றும் குறுவை தொகுப்பு திட்டத்தில் இடுபொருள் கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது

நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமை தாங்கினார் அப்போது விவசாயிகளுக்கு 23 வது தவணை வழங்கும் பணியை பிரதமர் மோடி மேற்கு வங்கத்தில் தொடங்கி வைத்தது காணொளி காட்சி வழியாக ஒளிபரப்பப்பட்டது நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் வினோத் ரவி விவசாயிகளுக்கு மண்வள அட்டை ,குறுவை தொகுப் பு திட்டத்தில் உயிர் உரம், நெல்நுண்ணூட்டம்,பருத்திநுண்ணோட்டம் போன்றவற்றை வழங்கினார் இதையடுத்து வேளாண்மை துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசின் திட்டங்கள் குறித்து கண் காட்சி அரங்குகளை பார்வை யிட்டார்

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், வேளா ண்மை இயக்குனர் வித்யா , வருவாய் கோட்டாட்சியர் திருமலை வேளாண்மை துணை இயக்குனர் கள் ஆய்யம்பெருமாள் (பயிற்சி நிலையம்) சாருமதி (மாநிலத் திட்ட ம்) மாலதி (மத்திய திட்டம்) மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சாமுவேல் தோட்டக்கலை துணை இயக்குனர் வெங்கட்ராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

தமிழக முதலமைச்சர் விஜய் பிறந்த நாளில் யொட்டி கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் கோவிலில் சிறப்பு பூஜை நடந்தது இதில் அமைச்சர் வினோத் ரவி துறை கலந்து கொண்டு முதலமைச்சர் விஜய் பெயரில் அர்ச்சனை செய்து வழிபட்டார் தொடர்ந்து கும்பகோணத்திலிருந் து சோழபுரம் திருப்பனந்தாள், அணைக்கரை வரை பஸ்நடைநீட்டிப்புசேவையைஅமைச்சர வினோத் ரவி கொடியசைத்து தொடங்கி வைத்தார் முன்னதாக அமைச்சர் செய்தியாள ர்களுக்கு பேட்டி அளித்தார்:

அப்போது அவர் முதலமைச்சர் விஜய் பிறந்தநாளையொட்டி கும்பகோணம் தொகுதி மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி வழங்க ப்பட உள்ளன. கும்பகோணம் பகுதியில் உள்ள சேமிப்பு கிடங்கு களில் நெல் முட்டைகள் நனைந்து விலகி உள்ளதா? என ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் திருமண்டங்குடியில் கரும்பு விவசாயிகள் தொடர் போராட்டம் தொடர்பான ஆலோசனை செய்த பின் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். நிகழ்ச்சியில் அரசு போக்குவரத் து கழக மண்டல மேலாளர் நடராஜன், தாசில்தார் பூங்கொடி, மாநகராட்சி ஆணைய சுதா, போக்குவரத்து கழக துணை மேலாளர்கள் தமிழ்ச்செல்வன், ராஜேஷ், உதவி மேலாளர்கள் கண்டாய்தபாணி, ராஜ்மோகன், கிளை மேலாளர் சுரேஷ், உதவி பொறியாளர்கள் ராஜா, திருஞான சம்பந்தம், த.வெ.க கிழக்கு மாவட்ட பொருளாளர் விஜய் சந்திரன், நிர்வாகிகள் செந்தில் அஞ்சனா பாலாஜி, வினித் , பெஞ்சமின், மாநகர செயலர் முருகானந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்




# இசையால் இணைவோம் ராக சங்கமம் நிகழ்ச்சி

கோவை ஜூன்:22

கோவை மருதமலை சாலை ஐஒபி காலனிபகுதியில்இசையால்இணைவோம் ராக சங்கமம் நிகழ்ச்சி 25726 தேதியில் நடைபெறுவதை தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் கூறியதாவது,

கலை என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல,அது ஒரு சமூகத்தின் அடையாளம். அந்த அடையாளத்தைத் தாங்கிப் பிடிக்கும் தூண்களாகத் திகழ்பவர்கள் நம் இசைக்கலைஞர்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாகப் பல திறமையான கலைஞர்கள் இன்று முறையான வருமானம் இன்றி, வறுமையில் வாடி வருகின்றனர்.

இந்த இசை உன்னத நோக்கத்துடன் நாங்கள் அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற, "இசையால் கலைஞர்கள் வாழ்வினை காப்போம்" என்ற "ராக சங்கமம்" என்ற பிரம்மாண்ட இசை நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறோம்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் திரட்டப்படும் நிதி முழுமையாக நலிந்த நிலையில் உள்ள இசைக்கலைஞர்களின் மருத்து வச் செலவுகள்,கல்வி உதவி மற்றும் அடிப்படைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்று கூறினர்.

# திருநெல்வேலியில் 250 கிராம் கஞ்சா பறிமுதல்: வாலிபர் கைது

திருநெல்வேலி, ஜூன் 22

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் அருகே சட்டவிரோதமாக கஞ்சா விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்த வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் பகுதியில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் ஜான்சன் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், சுப்பிரமணியபேரி விலக்கு அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த உதயத்தூரை சேர்ந்த நவீன்குமார் (வயது 31) என்பவரை போலீசார் சோதனை செய்தனர்.

அதில் அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய 250 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதுகுறித்து ராதாபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரிமுத்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மேற்சொன்ன வாலிபரை கைது செய்து, அவரிடமிருந்து 250 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தமிழக முதல்வர் பிறந்த நாளினை முன்னிட்டு

# கிருஷ்ணகிரியில் மத்திய மாட்ட தவெக சார்பில் மாரத்தான் போட்டி: மாவட்ட செயலாளர் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி, ஜூன் 22

கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட தவெக கட்சி சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் பிறந்தநாளினை முன்னிட்டு பல்வேறு இடங்களில் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி டான்சில் உள்ள தவெக அலுவலகத்தில் இருந்து மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என தனித்தனியாக துவங்கிய மராத்தான் போட்டியை மத்திய மாவட்ட தவெக செயலாளர் சுரேஷ் மற்றும் மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் ஆகியோர்கொ டியசைத்து துவக்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மாரத்தான் போட்டியானது லண்டன் பேட்டை, புதிய பேருந்து நிலையம், நேதாஜி ரோடு , பழையப்பேட்டை காந்தி சிலை, தர்மராஜா கோவில், BSNL அலுவலம், ஆர்.சி.பள்ளி, பெங்களூர் சாலை வழியாக சென்று மீண்டும் டான்சி வளாகத்தில் நிறைவடைத்தது. இதனையடுத்து மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தமாரத்தான் போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு மத்திய மாவட்ட தவெக செயலாளர் சுரேஷ் ம்ரொக்கப் பரிசுகள் மற்றும் மாரத்தான் போட்டியில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டினர். தமிழக முதல்வர் பிறந்த நாளினை முன்னிட்ட நடத்தப்பட்ட இந்த மாரத்தான் போட்டியில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், கோபிசெட்டிபாளையம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆர்வத்துடன் கலந்துக் கொண்டனர். மேலும் இந்த மாரத்தான் போட்டியில் முன்னாள் சேர்மன் மது ஹேம்நாத், உறுப்பினர் சேர்க்கை அணி பிரகாஷ், மேற்கு மாவட்ட இணைச் செயலாளர் ஹரிஸ், மாவட்ட பொருளாளர் முருகேசன், வேப்பனப்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் நாகராஜன், மாவட்ட மகளிர் அணி தலைவி இந்திரா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஹேமபிரியா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அருள்குமார், மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பார்த்திபன், இணை அமைப்பாளர் பாரதி, சிபிஜ சச்சின், வேலன், நகர கழகம் ஹரிபிரசாந்த், மற்றும் தவெக நிர்வாகிகளான தென்னரசு,வேலன், தொழிலதிபர் கோல்டன் சுரேஷ், ஆனந்த், டாக்டர் ஐயப்பன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்.



# குமரி மாவட்டத்தில் நீட் மறுதேர்வு 10 இடங்களில் நடைபெற்றது

நாகர்கோவில், ஜூன். 22

நாடு முழுவதும் மருத்துவ படிப்புகளுக்கான இளநிலை நீட் நுழைவு தேர்வு நேற்று நாடு முழுவதும் பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நீட் தேர்வை எழுவதற்காக மொத்தம் 4,968 மாணவ மாணவிகள் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களுக்காக மாவட்ட முழுவதும் நாகர்கோவில் எஸ்எல்பி அரசு மேல்நிலைப்பள்ளி, இந்து கல்லூரி, சிறுமலர் மேல்நிலைப்பள்ளி, டதி பள்ளி. ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப் பள்ளி, எஸ் எம் ஆர் வி மேல்நிலைப் பள்ளி, கோணம் கேந்திரிய வித்யாலயா பள்ளி, பி கே சி பழ விளை காமராஜர் பாலிடெக்னிக் கல்லூரி போன்ற 10 தேர்வு மையங்கள் தயார் செய்யப்பட்டிருந்தன.

தேர்வு மதியம் 2 மணிக்கு தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், தொலைதூரப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவிகள் காலையிலே தேர்வு மையங்களில் குவிய தொடங்கினர்.

தேசிய தேர்வுகள் முகமையின் கடுமையான விதிமுறைகளை பின்பற்றி காலை 11 மணிக்கு மேல் மாணவர்கள் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப் பட்டனர். தேர்வு எழுத வந்தவர்களின் அனுமதி சீட்டு மற்றும் அதிகாரபூர்வ அடையாள அட்டைகள் ஒவ்வொன்றாக தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகு அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

செல்போன்கள் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்சுகள், கால்குலேட்டர் உள்ளிட்ட எந்த எலக்ட்ரானிக் பொருட்களும் தேர்வு அறைக்குள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. நீட் தேர்வின் கடுமையான ஆடை கட்டுப்பாடுகள் இந்த முறையும் தீவிரமாக பின்பற்றப்பட்டன. குறிப்பாக மாணவிகள் கம்மல், கொலுசு போன்ற ஆபரணங்கள் அணிந்து செல்ல தடை விதிக்கப்பட்டது.

மதியம் 1:30 மணிவரை மட்டுமே மாணவர்கள் தேர்வு மையத்துக்குள் நுழைய அனுமதி அளிக்கப்பட்டது. அதன் பிறகு வந்த மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டன. மதியம் 2 மணிக்கு தொடங்கி தேர்வு மாலை 5:20 மணி வரை நடைபெற்றது. மாணவர்கள் எந்த வித குழப்பமும் இன்றி தங்களுக்குரிய தேர்வு அறைக்கு சென்றனர்.

தேர்வு எழுத வந்த மாணவர்களை தவிர பெற்றோர்கள் உறவினர்கள் என வேறு யாரும் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கவில்லை. இதனால் பிள்ளைகளை தேர்வு எழுத அனுப்பி வைத்துவிட்டு சுட்டெரிக்கும் வெயிலை பொருட்படுத்தாமல் நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் தேர்வு மையங்களுக்கு வழியே சாலையோரங்களிலும் மரநிழல்களிலும் காத்திருந்தனர். அனைத்து தேர்வு மையங்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

கருங்கல் அருகே

# வெளிநாட்டில் மருத்துவ சீட் வாங்கி தருவதாக மோசடி

## தந்தை, மகன் மீது வழக்கு

நாகர்கோவில், ஜூன். 22

கருங்கல் அருகே உள்ள பாலூர் பகுதியை சேர்ந்தவர் அன்பு மோகன்ராஜ் மகன் ஆலன் மேக்ஸ்வெல். இவர் தற்போது பள்ளி படிப்பை முடித்துவிட்டு வெளிநாட்டில் எம்பிபிஎஸ் படிக்க தயாராகி வருகிறார். அப்போது நாகர்கோவில் தம்பத்து கோணம் பகுதியை சேர்ந்த பிரைட் தங்க சேவியர் என்பவர் என்பவர் அறிமுகம் ஆகி உள்ளார். அவர் மோகன்ராஜன் மனைவி ஷீபாவிடம் வெளிநாட்டில் உள்ள மருத்துவ கல்லூரியில் எளிதாக எம்பிபிஎஸ் சீட் வாங்கி தர முடியும் என்று கூறியுள்ளார்.

இதை நம்பிய ஷீபா தன் மகனின் மருத்துவக் கல்விக்காக ரூ. 7 லட்சத்து 54 ஆயிரத்தை கொடுத்துள்ளார். அதனைப் பெற்றுக் கொண்ட பிரைட் தங்க சேவியர் மருத்துவ சீட்டு வாங்கி தராமல் ஏமாற்றி காலதாமதம் செய்து வந்துள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த ஷீபா தான் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டுள்ளார். ஆனால் அதனை திருப்பித் தராமல் பிரைட் தங்க சேவியர் ஏமாற்றி வந்தாக கூறப்படுகிறது.

இது குறித்து நாகர்கோவில் நேசமணி நகர் காவல் நிலையத்தில் ஷீபா புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் விசாரித்து, பிரைட் தங்க சேவியர் மற்றும் அவரது மகன் சயான் ஆகியோர் மீது மோசடி வழக்கு பதிவு செய்தனர். பிரைட் தங்க சேவியரை கைது செய்து அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

# பள்ளிகளில் யோகா வகுப்புகளை அறிமுகப்படுத்த வேண்டும்

## முதல் அமைச்சருக்கு கோரிக்கை



ஈரோடு, ஜூன் 22

வாரத்திற்கு ஒரு நாளாவது யோகா பயிற்சியை கட்டாயமாக்க வேண்டும் என்று உலக சமுதாய சேவா சங்க தலைவர் டாக்டர் எஸ்.கே.எம். மயிலானந்தன் முதலமைச்சரு க்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈரோட்டில் உள்ள வி.இ.டி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக யோகா தின விழாவில் அவர் பேசியதாவது: "இன்றைய சமூகம் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வருகிறது. அமைதியை நிலைநாட்ட யோகாவும், தியானமும் மட்டுமே சிறந்த வழிகள். யோகா எந்த ஒரு மதத்திற்கும் உரியது அல்ல. கிறிஸ்தவர்களும் இதைப் பயிற்சி செய்கிறார்கள். ஒரு காலத்தில் பள்ளிகளில் யோகா மற்றும் தியான வகுப்புகள் இருந்தன. ஆனால், சமீபகாலமாக இதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, அனைத்துப் பள்ளிகளிலும் வாரம் ஒரு பாடவேளையாவது மாணவர்களுக்கு யோகா மற்றும் தியானப் பயிற்சி அளிக்க முதலமைச்சரிடம் கோரிக்கை விடுக்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். விழாவில் கல்லூரி செயலாளர் சந்திரசேகர், ஈரோடு கலைக் கல்லூரி தலைவர் ராஜமாணிக்கம், துணைத் தலைவர் ஜெகதீசன் மற்றும் கல்லூரி முதல்வர் டாக்டர் பார்வதி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் மாணவ மாணவிகள் உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தனர்.

முதலமைச்சர் விஜய் பிறந்தநாளையொட்டி

# த.வெ.க .சார்பில் சூளகிரி மேற்கு ஒன்றியம் சார்பாக யோகா பயிற்சி



சூளகிரி ஜூன் 22:

ஜூன் 22 ல் பிறந்தநாள் காணும் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் C ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் கிருஷ்ணகிரி மத்திய மாவட்டம் சூளகிரி மேற்கு ஒன்றியம் சார்பாக யோகா பயிற்சி முகாம் சூளகிரி மேற்கு ஒன்றிய துணை செயலாளர் மாதராஜ் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினரக கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட செயலாளர் G.சுரேஷ், சூளகிரி மேற்கு ஒன்றிய செயலாளர் பசவராஜ், மேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் , கிழக்கு ஒன்றிய செயலாளர் திம்ராஜ், வடகிழக்கு ஒன்றிய செயலாளர் பார்த்தசாரதி, வேப்பனபள்ளி ஒன்றிய செயலாளர் நாகராஜ், மாணவரணி அமைப்பாளர் அருள் , மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரத்தினவேல் , சுரேஷ், it wing மகேந்திரன், தானம், யோகா பயிற்சியாளர் சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் மூர்த்தி, மஞ்சுநாத், கிருஷ்ணப்பா, முரளி, நாகராஜ், ஐஸ்வர்யா, தருண், ராஜேஷ் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள். இந்த விழாவில் மாணவர்களுக்கு பரிசு மற்றும் அன்னதானம் நடைபெற்றது.



## மார்த்தாண்டம் கொல்ல குளத்தின் அவலநிலை

# வர்த்தக நிறுவனங்கள், மருத்துவமனை கழிவுகளால் சுகாதார சீர்கேடு

மார்த்தாண்டம், ஜூன்.22

குமரி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வர்த்தக நகரமான மார்த்தாண்டம் அருகே கொடுங் குளம் பகுதியில் கொல்லக்குளம் உள்ளது. இந்த பகுதியை சேர்ந்த சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலம் மற்றும் 1500 மேற்பட்ட குடியிருப்பு வாசிகளின் முதுகெலும்பாக இந்த குளம் உள்ளது. ஆனால் தற்போது மார்த்தாண்டம் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனை உட்பட்ட பல கழிவுகள் மழை நீர் ஓடை வழியாக பாய்ந்தோடி கொல்ல குளத்தில் கலந்து வருகிறது.

இந்த குளத்தை தூர் வாரி சீரமைத்து பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. இதனால் இந்த குளம் பாசி நிறைந்து, பிளாஸ்டிக் கழிவுகள் கலக்கும் கழிவு நீர் குளமாக மாறி உள்ளது. இந்த குளத்தின் அருகே உள்ள குடிநீர் கிணறும் இதே அவலநிலை நீடிக்கிறது.

இந்த குளத்தின் உபரி நீர் வெளியேறி விவசாய தேவைக்காக செல்லும் மதகு சமூக விரோதிகளால் காங்கிரீட் கலவை கொண்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கழிவுகள் தேங்குவதால் இந்த குளம் பயனற்று துர் நாற்றம் வீசி சுகாதார சீர்கேடு ஏற்பட்டு இந்த பகுதியில் பல தொற்று நோய்கள் பரவி வருகிறது. இதற்கு நடவடிக்கை எடுக்க பொது பணித்துறை மற்றும் நகராட்சி, மாவட்ட நிர்வாகத்திற்கு பல முறை மனுக்கள் கொடுத்தும் இது வரை நடவடிக்கையும் எடுக்காததால் இந்த குளம் முழுவதும் கழிவு நீர் சேகரிப்பு கிடங்கு போல் மாறி வருகிறது. உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .

## முட்டம் துறைமுகம் அருகே

# படகில் இருந்து கடலில் தவறி விழுந்த மீனவர் சாவு

நாகர்கோவில், ஜூன். 22

வெள்ளிச்சந்தை அருகே உள்ள மேல முட்டம், அந்தோனியார்தெருவைசேர்ந்தவர்அனீஸ்ஜெர்பின். இவருக்கு சொந்தமான பைபர் படகில் முட்டம் ஓடைத்தெருவை சேர்ந்த ராஜன் என்பவருடன் சில மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர். மீன்களை பிடித்து விட்டு அவர்கள் துறைமுகம் திரும்பினார். முட்டம் துறைமுகத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் படகு கடலில் வரும்போது அதில் வந்த ராஜன் எதிர்பாராதவிதமாக நிலை தடுமாறி கடலில் தவறி விழுந்தார்.

இதனை கண்டு அதிர்ச்சியடைந்த சக மீனவர்கள் கடலில் குதித்து அவரை போராடி மீட்டனர். பின்னர் அவரை கரைக்கு கொண்டு வந்து அவரை சிகிச்சைக்காக குமாரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்துவிட்டு ராஜன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து படகின் உரிமையாளர் வெள்ளிச்சந்தை போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நாகர்கோவில் அருகே என்ஜினீயரிங் மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை

நாகர்கோவில், ஜூன் 22

காப்புக்காடு பகுதியைச்சேர்ந்தவர்ராஜன்(வயது 58). இவருடைய மனைவி ஹேமா. இவர்களுடைய மகன் பிரத்திவ் (20). தற்போது முளகுமூடு அருகே உள்ள வெள்ளிக்கோட்டில் குடும்பத்தினருடன் ராஜன் வசித்தார். அவர் தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்த்தார். மகன் பிரத்திவ் (20), என்ஜினீயரிங் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வந்தார். இந்தநிலையில் சமீபகாலமாக யார் மீதும் நம்பிக்கை இல்லை, எல்லோரும் ஏமாற்றுகிறார்கள் என பிரத்திவ் புலம்பி வந்தாராம். இதனை அறிந்த பெற்றோர், மகனை சமாதானப்படுத்தி ஆறுதலாக பேசி வந்துள்ளனர்.

தூக்குப்போட்டு தற்கொலை

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு பிரத்திவ், தாயார் ஹேமாவின் சேலையை எடுத்துக் கொண்டு மாடிக்கு சென்றுள்ளார். பின்னர் ராஜனும், ஹேமாவும் சிறிது நேரத்தில் மாடிக்கு சென்றனர். அங்கு சேலை மூலம் தூக்கில் தொங்கிய நிலையில் பிரத்திவ் உயிருக்காக போராடினார். இதனை பார்த்து துடிதுடித்து போன பெற்றோர், அவரை அக்கம் பக்கத்தினர் உதவியுடன் மீட்டு சிகிச்சைக்காக சுவாமியார்மடத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக இறந்தார். மேலும் இதுகுறித்து திருவட்டார் போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் கிறிஸ்டோபர் வழக்குப்பதிவு செய்து மாணவரின் தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகிறார். என்ஜினீயரிங் மாணவர் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

# அனைத்து இன நாய் சாம்பியன்ஷிப் கண்காட்சி



கோவை ஜூன்:22

கோவை மான்செஸ்டர் கென்னல் கிளப் கோயம்புத்தூர்,இந்தியா — 'தி கென்னல் கிளப் ஆஃப் இந்தியா' அமைப்போடு இணைக்கப்பட்ட கோவை மான்செஸ்டர் கென்னல் கிளப் (CMKC), மிகவும் எதிர்பார்த்த தனது 5 மற்றும் 6வது அனைத்து இன நாய் சாம்பியன்ஷிப் கண்காட்சியை நடத்தியது. இந்த பிரம்மாண்ட நிகழ்வு,நாடு முழுவதிலும் உள்ள நாய் பிரியர்கள், வளர்ப்பாளர்கள் மற்றும் சிறந்த நாய் இனங்களை ஒன்றிணைத்து, கோயம்புத்தூரை நாய் ஆர்வலர்களின் மிக முக்கிய மையமாக மாற்றியது.

இந்த மதிப்புமிக்க சாம்பியன்ஷிப் கண்காட்சி, கோயம்புத்தூர் அவினாசி சாலையில் உள்ள நவா இந்தியா சிக்னல் அருகில் அமைந்துள்ள ஹிந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் சிறப்பம்சங்கள் மற்றும் நடுவர் குழு நாய் இனங்களின் தனித்துவத்தை பறைசாற்றும் விதமாக அமைந்த இந்த சாம்பியன்ஷிப் போட்டியில், 11 போட்டிப் பிரிவுகளின் கீழ் 50க்கும் மேற்பட்ட நாய் வகைகளைச் சேர்ந்த 400க்கும் அதிகமான நாய்கள் பங்கேற்றன. ஒவ்வொரு நாய் இனத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில், இந்தியாவின் புகழ்பெற்ற தேசிய நடுவர்களானஷரத் சர்மா,டி. பிரீதம் மற்றும் ரஞ்சித் எஸ். முன்ஜால் ஆகியோர் அடங்கிய உயர்மட்ட நடுவர் குழு இந்த நாய் வகைகளை மதிப்பீடு செய்தது.

இந்த நிகழ்வில் டெல்லி, கல்கத்தா, பூனா, மேற்கு வங்கம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின்பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சிறந்த நாய் வளர்ப்பாளர்கள் மற்றும் நாய்கள் கலந்து கொண்டன.

மேலும்,நமது மண்ணின் பெருமையான கொம்பை,

கன்னி, சிப்பிப்பாறை, ராஜபாளையம் போன்ற நாட்டு நாய் இனங்களின் அணிவகுப்பு இந்த கண்காட்சியின் மிக முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது.கோவை மான்செஸ்டர் கென்னல் கிளப் தலைவர் தனுராய் மற்றும் செயலாளர் ஆர். சரவணகுமார் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த கண்காட்சி, பொறுப்பான செல்லப்பிராணி வளர்ப்பை ஊக்குவித்தல், நாய் இனங்களின் தூய்மையைக் கொண்டாடுதல் மற்றும் நாய் ஆர்வலர்கள் தங்களுக்குள் தொடர்புகொள்வதற்கான ஒரு தளத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை வெற்றிகரமாக எட்டியது.



# எனக்கு யாரும் சொந்தமில்லை கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்து போன முதியவர்

## உடலை மீட்டு உறவினர்களிடம் ஒப்படைத்த 'மை ஜீவன் எயிட் டிரஸ்ட் நிர்வாகிகள்.

தஞ்சாவூர் ஜூன் 22

தஞ்சை அரசு மருத்துவமனையில் "எனக்கு யாரும் சொந்தமில்லை" என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, தஞ்சை அரசு மருத்துவமனையில் மறைந்த முதியவர் ஒருவரின் உடலை, வேகமாக செயல்பட்டு சமூக வலைத்தளங்களின் உதவியோடு, தேடிப்பிடித்து அவரது உறவினர்களிடம் ஒப்படைத்த நிகழ்வு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், தெற்கு ராஜ வீதியைச் சேர்ந்த கனகராஜ் என்பவரின் மகன் மகாலிங்கம் (வயது 60). இவர் (18.06.2026) தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இறப்பதற்கு முன், தனக்கு யாரும் சொந்தமில்லை என்று அவர் எழுதி வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் அவரது உடல் உறவினர்கள் யாரென்றும் தெரியாமல் மருத்துவமனையிலேயே வைக்கப்பட்டு இருந்தது.

இந்தச் சோகமான தகவல், புதுக்கோட்டையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் வீரமணி மூலமாக சேலம் ஆர்.ஜே. குட்டி பிரகாஷ் கவனத்திற்கு வந்தது. தகவலின் தீவிரத்தை உணர்ந்த ஆர்.ஜே. குட்டி பிரகாஷ், உடனடியாக இதனை மை ஜீவன் எயிட் டிரஸ்ட் நிறுவனத் தலைவர் டாக்டர் ஷிபு விடம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவும் நோக்கில், டாக்டர் ஷிபு வழிகாட்டுதலின்படி, 'மை ஜீவன் எயிட் டிரஸ்ட்' சார்பில் இந்தத் தகவல் அனைத்து சமூக வலைத்தளங்களிலும் மிகத் தீவிரமாகப் பகிரப்பட்டது.

சமூக வலைத்தளப் பதிவினால் சில மணி நேரங்களிலேயே தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள அவரது முகவரி கண்டறியப்பட்டு, முதியவர் மகாலிங்கத்தின் உறவினர்களுக்குத் தகவல் முறைப்படி கொண்டு சேர்க்கப்பட்டது.

தகவல் அறிந்த உறவினர்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு விரைந்து வந்தனர். அதனைத் தொடர்ந்து, 'மை ஜீவன் எயிட் டிரஸ்ட்' நிர்வாகிகள் மற்றும் காவல்துறையினரின் உரிய உதவியுடன் மகாலிங்கத்தின் உடல் உறவினர்களிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவரது உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மை ஜீவன் எயிட் டிரஸ்ட் நிர்வாகிகள் முன்னின்று நடத்தியது பொதுமக்களிடையே நல்ல வரவேற்பையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.








# திருமலை மகாதேவர் சிவன் கோவில் திருப்பணி: மை ஜீவன் எயிட் டிரஸ்ட் சார்பில் அதிகாரிகளுக்கு கோரிக்கை மனு

நாகர்கோவில் ஜூன் 22

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள முஞ்சிறை திருமலை மகாதேவர் ஆலயத்தின் கோபுரம் மற்றும் கோவில் சீரமைப்புப் பணிகள் நீண்ட காலமாக தொடங்கப்படாமல் முடங்கிக் கிடக்கிறது. கடந்த 14 ஆண்டு காலமாக இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என்பதால், கோவில் சிதிலமடைந்து காணப்படுகிறது. இதனால் கவலையடைந்த அப்பகுதி பொதுமக்கள், இக்கோவிலை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மை ஜீவன் எயிட் டிரஸ்ட் அமைப்பிடம் தொடர் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

பொதுமக்களின் இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று, மை ஜீவன் எயிட் டிரஸ்ட் சார்பில் உடனடியாக இதற்கான நடைமுறைப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக, சிவன் கோவிலின் கோபுரத்தை புதுப்பிக்கவும், இதர சீரமைப்புப் பணிகளை உடனே மேற்கொள்ளவும் வலியுறுத்தி இந்து சமய அறநிலையத்துறைக்கு அதிகாரப்பூர்வ விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், 14 ஆண்டுகாலமாக முடங்கியுள்ளஇக்கோவில்திருப்பணியை விரைந்து தொடங்கக் கோரி, மை ஜீவன் எயிட் டிரஸ்ட் சார்பில் மாவட்ட ஆட்சியர், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் (சுசீந்திரம்),இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோருக்கு முறைப்படி கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"14 ஆண்டு காலமாக கும்பாபிஷேகம் நடைபெறாமல் இருக்கும் இந்த வரலாற்றுச்சிறப்புமிக்கஆலயத்தின்திருப்பணியை அறநிலையத்துறை விரைந்து கையில் எடுத்து, இப்பகுதி பக்தர்களின் நீண்ட கால மனக்குறையை தீர்க்க வேண்டும்" என மை ஜீவன் எயிட் டிரஸ்ட் மற்றும் பொதுமக்கள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# இனி பெண்கள் பெட்டியில் ஆண்கள் ஏறினால் ரூ.2500 ஸ்பாட் பைன்

சென்னை, ஜூன் 22

ரயில் நிலையங்களில் அனுமதியின்றி பொருட்கள் விற்பனை செய்தால், 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். செலுத்த மறுத்தால், நீதிமன்றம் வாயிலாக, 5,000 ரூபாய் வரை அபராதம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் அனுமதியின்றி பயணித்தால், 2,000 ரூபாய்; பெண்களுக்கான பெட்டிகளில் ஆண்கள் பயணித்தால், 2,500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். மேலும், ரயிலில் புகைபிடித்தால், 2,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். இந்த புதிய விதிமுறைகள், வரும் 1ம் தேதி முதல் அமலாகும் என, ரயில்வே அறிவித்துள்ளது. ரயில்களிலும் ரயில்வே வளாகங்களிலும் அனுமதியின்றி நடைபாதை வியாபாரம் மற்றும் பிச்சை எடுத்தால் ரூ. 2,000 அபராதம் விதிக்கப்படும். மீண்டும் மீண்டும் தவறு செய்பவர்களுக்கு ஓராண்டு வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

இந்தத் திருத்தங்கள், ரயில் பெட்டிகளிலும் நிலையங்களிலும் பிச்சை எடுப்பதை வெளிப்படையாகத் தடை செய்கின்றன. தொந்தரவு செய்தல், தகாத அல்லது ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துதல், ரயில்வே வசதிகளுக்கு இடையூறு செய்தல் அல்லது சக பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடும் பயணிகளுக்கு ரூ.1,000 அபராதம் விதிக்கப்படலாம். போதையில் இருப்பது கண்டறியப்பட்டு, இடையூறு செய்பவர்கள் ரயில்கள் மற்றும் நிலையங்களில் இருந்து அகற்றப்படலாம், மேலும் அவர்களும் தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடலாம். ஒதுக்கப்பட்ட பெட்டிகள், இருக்கைகள் அல்லது படுக்கைகளை ஆண்கள் ஆக்கிரமிக்கும்போது அவர்களுக்கு ரூ.2,500 அபராதம் விதிக்கப்படும். அத்தகைய பயணிகளை அகற்றுவதற்கு ரயில்வே ஊழியர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். ரயில்களில் தடைசெய்யப்பட்ட அல்லது அபாயகரமான பொருட்களை எடுத்துச் சென்றால், குறைந்தபட்சம் ரூ.10,000 அபராதம் விதிக்கப்படலாம்.



## தஞ்சாவூரில்

# முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை யொட்டி த .வெ.க .சார்பில் மருத்துவ முகாம்

தஞ்சாவூர் ஜூன் 22

முதலமைச்சரின் த.வெ.கதலைவருமானவிஜய் பிறந்தநாளையொட்டி தஞ்சாவூர் மத்திய மாவட்ட தவெக சார்பில் மருத்துவ முகாம் நடத்தப் பட்டு வருகிறது

தஞ்சாவூர் எம்எல்ஏ அலுவலக வளாகத்தில் நடந்த மருத்துவ முகாமை மாவட்ட செயலாளரும் தலைமைக் கழக நிர்வாக குழு உறுப்பினருமான விஜய் சரவணன் எம்எல்ஏ தொடங்கி வைத்தார் முகாமல் எக்கோ, ஸ்கேன், இசிஜி, இரத்த பரிசோதனை, இலவச மருந்துகள் சேவை, செவித்திறன் பரிசோதனை, மேற்கொள்ளப்பட்டன. முகாமில் டெல்டா பகுதி சேர்ந்த மருத்துவ நிபுணர்கள், வினோதக ன் மருத்துவமனை இணைந்து சிகிச்சைபணிகளை மேற்கொண்டனர் இதற்கான ஏற்பாடுகளை தொகு தி பொறுப்பாளர்கள் ஜனப்ரியன், பாலாஜி மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் முதலாம் ஆண்டு விழா

சேலம், ஜூன் 22

மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் அமைப்பின் சார்பில் சேலம் அண்ணா பூங்கா எதிரில் உள்ள காருண்யா ஏசி ஹாலில் முதலாம் ஆண்டு முப்பெரும் விழா நடைபெற்றது

இந்த விழாவில் மக்கள் சட்ட உரிமைகள் கவுன்சில் நிறுவனரும் மாநில தலைவருமான சந்திரசேகர் தலைமை தாங்கினார் மாநில செயலாளர் ஷானவாஸ் வரவேற்புரை ஆற்றினார் மாநில மகளிர் மகளிர் அணி தலைவி திவ்யலட்சுமி கிருபாகரன் நன்றி உரை ஆற்றினார் மேலும் இந்த விழாவை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றிய சந்திரசேகர் கூறும் போது நமது அமைப்பில் அனைவரும் ஒற்றுமையுடனும் பரந்த மனப்பான்மையுடனும் செயல்பட்டு வருகிறோம் மேலும் இந்த அமைப்பை வலுப்படுத்த பொதுமக்களுக்கு உண்டான தேவைகளை அறிந்து அவர்களுடன் உரையாற்றி எந்த வகையில் உதவி வேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் மேலும் நமது அமைப்பில் பொதுமக்களுக்கு உண்டான சேவைகளில் ரத்த தானம் செய்த நல் உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்த சேவைகளில் குழந்தைகளுக்கு படிப்புக்கான புத்தகங்கள் நோட்டுகள் பென்சில்கள் பேனாக்கள் போன்ற நம்மால் முடிந்த உபகரணங்கள் செய்ய வேண்டும் அதேபோல் மேல் படிப்புக்கு உண்டான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் மேலும் இந்த அமைப்பு வளர்வதற்கு பொறுமையும் சேவையும் மிக மிக அவசியமானதாக இருக்க வேண்டும் என கூறினார் இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பணி ஓய்வு நீதி அரசர் பாரி மற்றும் பணி ஓய்வு மாவட்ட துணை கண்காணிப்பாளர் உமா சங்கர் பேச்சாளர் ரேஷ்மா மற்றும் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் மாநகர நிர்வாகிகள் மகளிர் அணியினர் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு இந்த முப்பெரும் விழாவை மிக சிறப்பாக கொண்டாடினார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.